# பிரிந்து வாழ்தல் மற்றும் மணமுறிவு குறித்த தகவல்கள்:

## திருமண உறவில்
## பதிவு செய்யப்பட்ட, திருமணமல்லாத ஒரு உறவில்
## பதிவு செய்யப்படாத, திருமணமல்லாத ஒரு உறவில்

### எனக்கு திருமணமாகிவிட்டது அல்லது நான் ஒரு பதிவு செய்யப்பட்ட உறவில் வாழ்கிறேன். நான் பிரிய விரும்புகிறேன். நான் எப்படி செயல்பட வேண்டும்?

நீங்கள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள பொறுப்பான பிராந்திய நீதிமன்றத்தில் மணமுறிவு பூர்வாங்க வழக்கை (Eheschutzverfahren) நடைமுறைக்கு கொண்டுவரலாம் மற்றும் பிரிந்து வாழ விண்ணப்பம் செய்யலாம் (படிவம்: Eheschutzverfahren). இவ்வழக்கை நீங்களோ அல்லது ஒரு சட்டப் பிரதிநிதி மூலமாகவோ தொடங்கலாம். நீங்கள் முதன்முறை சட்ட ஆலோசனைக்காக செல்லும்பொழுது அல்லது மாவட்ட நீதிமன்றத்திற்கு செல்லும் போது கீழ் வரும் ஆவணங்களை எடுத்துச் செல்லவும்:

- உங்கள் நிதி நிலமைக்கான ஆவணங்கள் (கடந்த இரண்டு ஆண்டு கால வருமானவரித் தகவல் ஆதாரத்துடன் அவற்றின் கணக்கு விபரம், 3 – 6 மாத ஊதியப் பட்டியல்கள், தொடர்ந்து வந்த செலவினங்களின் பற்று சீட்டுகள், 3 – 6 மாத வங்கிக் கணக்கு அறிக்கைகள்).
- திருமணத்தின் ஆரம்ப காலங்களிலிருந்து இன்று வரையுள்ள குறிப்புகள் (முக்கிய திகதிகளும் சம்பவங்களும், உதாரணமாக வாழ்க்கைத்துணைவரின் வன்முறைச் செயல்கள், மருத்துவ அறிக்கைகள், குற்றவியல் விசாரணைக்கான ஆவணங்கள், வன்முறையினின்று பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள்).

### இம்மணமுறிவு பூர்வாங்க வழக்கின் செலவு என்ன? இந்தப் பணத்தை சட்டப் பிரதிநிதிக்கு செலுத்துவது யார்?

நீங்கள் பணரீதியாக நெருக்கடியான நிலைமையில் வாழ்கிறீர்கள் எனில், நீங்களோ அல்லது உங்கள் சட்டப் பிரதிநிதியோ கட்டணமின்றி வழக்கை நடத்துவதற்கு மற்றும் இலவசமான சட்டப் பிரதிநிதித்துவத்துக்கு ஒரு மனுவினை அளிக்கலாம். இம்மனு ஏற்கப்பட்டால், நீதிமன்ற மற்றும் சட்டப் பிரதிநிதித்துவ செலவுகளை தற்காலிகமாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். பிற்காலத்தில் உங்கள் நிதிநிலைமை மேம்பட்டால் 10 வருடத்திற்குள் நீதிமன்றத்தால் நீதிமன்ற மற்றும் சட்டப் பிரதிநிதித்துவ செலவுகளை உங்களிடமிருந்து திரும்ப கேட்க முடியும். ஒருவேளை நீங்கள் மணமுறிவு பூர்வாங்க வழக்கினை திரும்பப் பெற்றீர்கள் எனில் அதுவரை ஏற்பட்ட நீதிமன்ற மற்றும் சட்டப் பிரதிநிதித்துவ செலவுகளை நீங்கள் ஏற்க நேரிடலாம். (இலவச சட்ட சேவைக்கான தகவல் ஏடு) சட்டப் பிரதிநிதித்துவத்திற்கான செலவினை நீங்களே ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருந்தால் நீங்கள் முதற்கண் ஒரு ஆலோசனை மையத்தில் அல்லது சட்டப் பிரதிநிதியிடம் மணமுறிவு பூர்வாங்க வழக்கை நடத்தும் செலவைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.


### நடத்தப்படும் இம்மணமுறிவு பூர்வாங்க வழக்கில் எதனை நான் சட்டத்தின் மூலம் நிர்ணயம் செய்ய முடியும்?

மனு தாக்கல் செய்யப்பட்டால் நீதிமன்றமானது பின்வரும் விடயங்களை நிர்ணயம் செய்யும்:

- வீடு ஒதுக்கீடு
- பிள்ளையின் பராமரிப்பு பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்ற தீர்மானம்
- பிள்ளைக்கான பராமரிப்புப்பணம்
- பாகப்பிரிவினை

### இப்பிரிவைக் குறித்து எனது வாழ்க்கைத்துணைவர் அறிந்தால் பிரச்சினை இன்னும் அதிகரிக்கும் என பயப்படுகிறேன்!

உங்கள் வாழ்க்கைத்துணைவர் உங்களிடமோ, உங்கள் பிள்ளைகளிடமோ வன்முறையைப் பிரயோகித்து இருந்தால் அல்லது வன்முறையைப் பிரயோகிப்பதாக அச்சுறுத்தியிருந்தால் காவலர் (Polizei) மூலம் கடுமையான சூழ்நிலையில் உங்கள் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். (வன்முறை பாதுகாப்புச் சட்டம் GSG). அவை உங்கள் வாழ்க்கைத்துணைவரை வீட்டில் இருந்து வெளியேற்றுவது, உங்கள் வீட்டின் அருகே ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்குள் அவர் நுழைய தடை, உங்களோடும் உங்கள் பிள்ளைகளோடும் 14 நாட்களுக்கு தொடர்பு கொள்ளத் தடை போன்றவைகளாக இருக்கலாம். நீங்கள் 8 நாட்களுக்குள் இப்பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிக்க ஒரே ஒரு முறை விண்ணப்பம் அளிக்கலாம். பாதிக்கப்பட்டோருக்கான ஆலோசனை நிலையங்களில் இலவசமாகவும் இரகசியமாகவும் உங்களுக்கு மணமுறிவு வழக்கின் போது ஆலோசனைகளை கொடுத்து உங்களுக்கு உதவி செய்யப்படும். பொதுவாக இப்படிப்பட்ட சட்டரீதியான பிரிவை நிறைவேற்ற இந்த 3 மாதங்கள் போதும். பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளின் பின்னும் உங்கள் வாழ்க்கைத்துணைவர் உங்களை அச்சுறுத்துவார் என்று அஞ்சினால் நீங்கள் மாவட்ட நீதிமன்றத்தில் குறிப்பாக தொடர்பு கொள்ளல் தடுக்கப்படல் (Persönlichkeitsschutz nach Zivilrecht ZGB 28b) போன்ற ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம். இதை மணமுறிவு விண்ணப்பத்தோடு ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கலாம். இது குறித்து சட்டப் பிரதிநிதியிடம் அல்லது ஒரு ஆலோசனை மையத்தில் விசாரிக்கலாம். உங்கள் வாழ்க்கைத்துணைவர் இத்தொடர்பு கொள்ளல் தடுக்கப்படல் சட்டங்களை மீறி நடக்கலாம் என்று அஞ்சினால் பெண்களுக்கான வீடுகள் உண்டு. அவை முழுமையான பாதுகாப்பை கொடுக்கின்றன.



## பிரிதல் உடனடியாக நடக்க வேண்டுமானால்

நீங்கள் விதிவிலக்காக மணமுறிவு வழக்கிற்கு முன் தற்காலிகமான சட்ட நடவடிக்கைகளை எடுக்கக் கேட்டுக் கொள்ளலாம். அதற்கு நீங்கள் வன்முறை செயல்களையும், மணமுறிவு விரைவில் நடப்பதற்கான அவசியத்தையும் இவ்விண்ணப்பத்தில் நிரூபிக்க வேண்டும். மேலும் விண்ணப்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் உடனடியாக, அதாவது எதிர் தரப்பின் கருத்தினை கேட்காமல், எடுக்கப்படாவிடில் ஏற்படக்கூடிய சீர் செய்ய இயலா பாதிப்புகளை தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். நீதிமன்றம் பின்னர் தற்காலிகமாக – ஆனால் உடனடியாக – மணமுறிவு பூர்வாங்க வழக்கிலுள்ள அதே சட்ட நடவடிக்கைகளை, அல்லது குறைந்தபட்சம் அவற்றில் ஒரு பகுதியினை எடுக்க முடியும். இச்சட்ட நடவடிக்கைக்கு முன்நிபந்தனைகள் அதிகம். ஒரு சட்ட ஆலோசனையின் மூலம் இந்நடவடிக்கைகள் எடுக்கப் பெறுவதற்கான உங்கள் வாய்ப்பினை தெளிவாக தெரிந்து கொள்ளுங்கள்.

## யார் வீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்?

பொதுவாக அதிகம் தேவை உள்ள நபர் - அதாவது பிள்ளைகளை பிரதானமாகப் பராமரிக்கின்ற பெற்றோர் தாய் அல்லது தகப்பன். நீங்கள் இதுவரை வாழ்ந்து வந்த வீட்டில் தொடர்ந்து இருக்க விரும்பினால் கீழே காண்பவைகளுக்கு விண்ணப்பிக்கவும்.

- வாழ்க்கைத்துணைவர் வெளியேறும் திகதி (சில நாட்களில் இருந்து 2 மாதங்கள் வரை). உங்கள் வாழ்க்கைத்துணைவர் வீட்டை விட்டு வெளியேற மாட்டார் என்று எண்ணுவதற்கு காரணங்கள் இருந்தால், அவரை வெளியேற்றுவதற்கான அதிகாரத்தை சட்டபூர்வமான பிரதிநிதி (Stadtammanamt) மூலம் விண்ணப்பிக்கலாம்.
- உங்கள் வாழ்க்கைத்துணைவர் உங்கள் சம்மதம் இன்றி வீட்டிற்குள் நுழையாதபடி வீட்டு திறவுகோல்களை முழுமையாக திருப்பி ஒப்படைத்தல். நீங்கள் முழுமையாக திறவுகோல்களை பெற்றுவிட்டேனா என்று சந்தேகப்பட்டு வன்முறை செயலுக்கு பயந்தால், வீட்டின் பூட்டுகளை மாற்றி விடவும்.

## யாரிடம் எனது பிள்ளைகள் வாழப் போகிறார்கள்?

இதுவரை பிள்ளைகளைப் பெரும்பாலும் பராமரித்த மேலும் இன்னும் தொடர்ந்து இதனை உத்திரவாதமாக செய்யக்கூடிய பெற்றோர் தாய் அல்லது தந்தை. நீதிமன்றம் தானாகவே யாரிடம் பிள்ளைகள் திறமையாக பராமரிக்கப்படுவர் (பிள்ளையின் நன்மை) எனப் பரிசோதிக்கும். உடன்பிறந்தவர்கள் வழக்கமாக ஒன்றாகவே இருப்பார்கள். ஆறு வயதுக்கு மேற்பட்டப் பிள்ளைகளை வழக்கின் போது விசாரிக்கக்கூடும்.

## பிள்ளைகளின் பராமரிப்பு உரிமையைப் பெறாத பெற்றோர் (தாய் அல்லது தந்தை) எவ்வளவு தடவை பிள்ளைகளை பராமரிக்கலாம்?

பொதுவாக பிரிதலுக்கு பின்னால் தாய் தந்தை இருவருக்குமே பிள்ளைகளைப் பராமரிக்கும் பொதுவான ஒரு உரிமை மற்றும் தனித்தனியான பராமரிப்பு பொறுப்பும் உள்ளது. பிள்ளைகளின் தாய் தந்தை இருவருமே பிள்ளைகளோடு தொடர்பு கொள்ளலாம். நீங்கள் உரிமையைப் பெறாத பெற்றோருடன் (தாய் அல்லது தந்தை) ஒரு உடன்பாடு செய்து அதனை நீதிமன்றத்தின் மூலம் முறைப்படுத்தலாம். நீங்கள் பிள்ளைகளை குறித்த நேரத்தில் கொடுக்க ஒரு ஒப்பந்தத்தை எடுத்து விடுமுறைகள் மற்றும் ஈஸ்டர், பெந்தேகோஸ்து, கிறிஸ்துமஸ் போன்ற போன்ற பண்டிகைகளுக்காக ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்க்கைத்துணைவர் பிள்ளைகளை அச்சுறுத்தி அல்லது அடித்திருந்து அல்லது பிள்ளைகளை கொடுக்கும்போது நிகழும் வன்முறை செயல்களால் பிரச்சனை அதிகரித்தால் நீங்கள் பார்வையிடும் உரிமையை அல்லது பிள்ளைகளை பார்வையிட உதவியாக ஒரு பார்வையாளரைக் கேட்டுப் பெறலாம். பிள்ளைகளுக்கு பெரும் ஆபத்தான நிலை ஏற்பட்டால் மட்டுமே பராமரிப்பு பொறுப்பு முழுமையாக அதுவும் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு மட்டுமே நீக்கப்படும்.

ஒருவேளை நீங்களும் உங்கள் வாழ்க்கைத்துணைவரும் பராமரிப்பு உரிமை மற்றும் பார்வையிடும் பொறுப்பு குறித்து ஒரு முடிவுக்கு வர இயலவில்லை எனில் நீதிமன்றம் இது குறித்து முடிவை எடுக்கும். இதற்காக நீதிமன்றம் தானாகவே முன்வந்து பிள்ளைக்கொரு பிரதிநிதியை அமர்த்தும் அல்லது நீங்கள் பிள்ளைக்கு ஒரு வழக்கறிஞருக்காக நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம் (www.kinderanwaltschaft.ch). இதற்கான செலவுகளை பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது இலவசமான வழக்கு நடத்தும் உதவி பெற்று இருந்தால் இச்செலவுகள் அதன் மூலமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

## எதை வைத்து நாங்கள் வாழ்க்கையை நடத்த முடியும்?

சட்டபூர்வமாய் தாபரிப்புப்பணம் குறித்த தீர்வு எடுக்கப்பட சில வாரங்கள் அல்லது மாதங்கள் தேவைப்படலாம். மணமுறிவு பூர்வாங்க வழக்கினை பதிவு செய்தவுடன் முன்னெச்சரிக்கையாக சமூக நிதி உதவிக்கு விண்ணப்பம் செய்யுங்கள். ஒருவேளை உங்களுக்கு வருமானம் இல்லாமல் இருந்து அல்லது குறைவான வருமானமே இருந்தால் உங்களுக்கு இத்தேசத்தின் நிதி ஆதரவு பெற்றுக் கொள்ள உரிமை உண்டு. உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத்துணைவருக்கும் பொதுவான வங்கிக் கணக்கு அல்லது கடன் அட்டை உண்டானால்

- உங்களிடம் போதிய சேமிப்பு இல்லாமல் இருந்து வங்கிக் கணக்கு கடன் அட்டை வாழ்க்கைத்துணைவரின் பெயரில் இருந்தால் உடனடியாக வங்கியில் இருந்து மூன்று மாதங்களுக்கான பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.
- வங்கிக் கணக்கு கடன் அட்டை உங்களின் பெயரில் இருந்தால் உடனடியாக வாழ்க்கைத்துணைவரின் உரிமத்தை தடை செய்யவும்.

மணமுறிவு பூர்வாங்க வழக்கில் இரு தரப்பினரின் தேவைகள் கணக்கிடப்பட்டு அவர்களின் வருமானங்களில் இருந்து கழிக்கப்படும். தேவைகளுக்கான பணத்தை ஒதுக்கிய பின் அதிக பணம் இருந்தால் முதலில் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அதிக பணம் பயன்படுத்தப்படும்.

பின்னரே தம்பதியின் பணப்பற்றாக்குறையை நீக்குவதற்காக இந்த அதிக பணம் பயன்படுத்தப்படும். உங்கள் சம்பளம் மற்றும் தாபரிப்பு பணம் இவை இரண்டிற்கும் அதிகமாக உங்கள் செலவு இருந்தால் உங்களுக்கு சமூக நிதி உதவி பெற உரிமை உண்டு. மணமுறிவின்போது, சூழ்நிலைகளைக் கருதி, நீங்கள் சற்று முன் வரை வேலை பார்க்கவில்லை எனினும் உங்களுக்கு வேலையற்றோரின் உதவி பணம் பெற உரிமை உள்ளது.

மணமுறிவு வழக்கின் தீர்ப்பில் நிர்ணயிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான பராமரிப்பு பணத்தினை அரசாங்கத்திடமிருந்து முன்பணமாக பெறலாம். இந்த முன்பணமானது அதிகபட்சமாக பிள்ளைகளுக்கான AHV/IV-Rente-வின் படி நிர்ணயிக்கப்படும் (2023-இல் இது Fr. 980 ஆகும்). எனினும் வாழ்க்கைத்துணைக்கு முன்பணம் கிடைக்காது. நீங்கள் வசிக்கும் உள்ளூராட்சியில் உள்ள கடன் சேகரிப்பு நிறுவனம் உங்களின் பெயரில் தாபரிப்பு பணத்தை கொடுக்க வேண்டிய நபரிடமிருந்து பெற்றுத்தரும்.

## இப்பிரிவு வாயிலாக எனது குடியுரிமை பாதிக்கப்படுமா?

பெரும்பாலும் சுவிட்சர்லாந்தின் வாழிட அனுமதி துணைவருடன் சேர்ந்து வாழ்வதோடு பிணைக்கப்பட்டு இருக்கிறது (Aufenthaltsstatus B im Familiennachzug). ஐரோப்பிய குடியுரிமை உள்ளவர்களுக்கு மூன்றாம் உலக நாடுகளின் குடியுரிமை உள்ளவர்களை விட சுவிட்சர்லாந்தில் தொடர்ந்து தங்க அனுமதி கிடைக்கும் வாய்ப்புகள் அதிகம். மூன்றாம் உலக நாடுகளின் குடியுரிமை உள்ளவர்கள் திருமணமான பின் அவர்களின் வாழ்க்கைத்துணைவருடன் சுவிட்சர்லாந்தில் மூன்று வருடங்கள் சேர்ந்து வாழ்ந்திருந்து, சமூகத்தில் வெற்றிகரமாக ஒருங்கிணைந்து இருந்தால் அவர்களுக்கு மணமுறிவின் பின் சுவிட்சர்லாந்தில் தொடர்ந்து தங்க அனுமதி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. எனினும் நீங்கள் முக்கிய தனிப்பட்ட காரணங்களை காண்பிக்கலாம் - குறிப்பாக திருமண வாழ்வில் வன்முறைச் செயலால் பாதிக்கப்பட்டு இருத்தல் அல்லது உங்கள் தாய் நாட்டில் சமூக ஒருங்கிணைப்பு ஆபத்தாக தோன்றுதல் போன்ற காரணங்கள் இதில் அடக்கம். இதற்கு சாட்சியான மருத்துவர் அறிக்கைகள், ஆலோசனை மையத்திலிருந்து அறிக்கைகள் அல்லது காவலர் (Polizei) மூலம் ஆணைகள் போன்றவற்றை கவனமாக வைத்திருக்கவும். உங்கள் வாழிட அனுமதி நிமித்தமாக வீட்டில் வன்முறை செயல்களை ஏற்றுக் கொள்ள வேண்டாம். இது குறித்து நாங்கள் உங்களுக்கு இலவசமாகவும், இரகசியமாகவும் ஆலோசனைகள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

## மணமுறிவு பூர்வாங்க பேச்சுவார்த்தையில் என்ன நடக்கலாம்?

ஆலோசனை மையத்தில், சட்டப் பிரதிநிதியிடம் அல்லது நீதிமன்றத்தில் மணமுறிவு பூர்வாங்க பேச்சு வார்த்தை குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் சட்டப் பிரதிநிதியின்றி வழக்கை தொடங்கியிருந்தால் பின்வரும் விடயங்களை மிகவும் கவனிக்கவும்:

- உங்களுக்கு சந்தேகமாக இருந்தால் எந்த உடன்பாட்டிலும் கையொப்பம் இட வேண்டாம்.
- கையொப்பமிடுங்கள், ஆனால் 10 நாட்களுக்குள் இந்த உடன்பாட்டினை மறுக்கும் உரிமை (Widerrufsvorbehalt) எனும் உட்கூறு உடன்பாட்டில் கண்டிப்பாக இடம்பெற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்துங்கள். பத்து நாட்களுக்குள்ளாக இந்த உடன்பாட்டினை ஒரு சட்டப் பிரதிநிதியின் பார்வைக்கு வையுங்கள். தேவைப்பட்டால் குறிப்பிட்ட கெடுவிற்குள் அதை இரத்து செய்யுங்கள்.

மணமுறிவு பூர்வாங்க பேச்சுவார்த்தைக்கு பிள்ளைகளை எடுத்துச் செல்ல முடியாது. இதற்காக ஒரு முழு நாளை ஒதுக்குங்கள். பேச்சுவார்த்தை நீடித்தாலும் பிள்ளையைப் பற்றி கவலைப்பட அவசியம் ஏற்படாத வகையில் பிள்ளை பராமரிப்பிற்கு மாற்று ஏற்பாடுகளை செய்யவும்.
ஜெர்மன் மொழி உங்கள் தாய் மொழியாய் இல்லாதிருந்தால் அல்லது நீங்கள் ஜெர்மன் மொழியில் அனைத்தையும் நன்றாக புரிந்து கொள்வீர்கள்/தெளிவு படுத்துவீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லாதிருந்தால் முன்னரே மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய ஒருவரை நீதிமன்றத்தின் வாயிலாக விண்ணப்பித்து ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

## மணமுறிவு பூர்வாங்க வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக எப்படி செயல்படலாம்?

நீங்கள் மணமுறிவு பூர்வாங்க வழக்கின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாவிட்டால் 10 நாட்களுக்குள் காரணங்கள் எழுதப்பட்ட தீர்ப்பை கேட்கலாம் அல்லது நீங்கள் காரணங்கள் எழுதப்பட்ட தீர்ப்பைப் பெற்றிருந்தால் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேல்முறையீட்டினை (தீர்ப்பின் கீழ் பகுதியில் உள்ள மேல்முறையீட்டு உரிமைகளை வாசிக்கவும்) சமர்ப்பிக்கலாம். இக்காலக்கெடுவுக்குள் மேல்முறையீட்டை சமர்ப்பிக்காவிட்டால் தீர்ப்பு சட்டபூர்வமான இறுதியான தீர்மானம் ஆகும். அதன் பின் சூழ்நிலை மிக்க மாறி இருந்தால் மாத்திரமே நீங்கள் அதில் மாற்றத்தை கேட்கலாம்.

## நாங்கள் மீண்டும் சேர்ந்து வாழ தொடங்கினால்?

ஒருவேளை நீங்கள் உங்கள் வாழ்க்கைத்துணைவருடன் திரும்ப வாழ தொடங்கினால் இத்தீர்ப்பு சுமார் 4 வாரங்களில் தானாகவே செல்லாததாகிவிடும். அதன்பின் மறுபடியும் பிரிந்து வாழ விருப்பப்பட்டால் ஒரு புதிய மணமுறிவு பூர்வாங்க வழக்கினை முதலில் இருந்து தொடங்க வேண்டும்.

## இவற்றை விட மணமுறிவினை உடனே நாடுவது நலமானதா?

இருவரும் ஏற்றுக்கொண்டு பிராந்திய நீதிமன்றத்தில் பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கும்பட்சத்தில் மணமுறிவு எப்போது வேண்டுமானாலும் சாத்தியமே. இருப்பினும் அனுபவரீதியாக பார்க்கும் பொழுது பெரும்பாலான பிரிவு ஒப்புதல்கள் திரும்பப் பெறப்படுகின்றன. ஆகவே மணமுறிவு பூர்வாங்க வழக்கை நடைமுறைக்கு கொண்டு வருவதே தாபரிப்பு பணம், வீட்டுப் பங்கீடு, பிள்ளைகளின் பராமரிப்பு பொறுப்பு இவற்றை தீர்மானிக்க விரைவான வழியாகும். வாழ்க்கைத்துணைவர் மணமுறிவினை விரும்பாவிட்டால் குறிப்பிட்ட 2 ஆண்டுகள் பிரிந்திருத்தலுக்கு பிற்பாடு தான் மணமுறிவு சாத்தியமாகும். திருமண

வாழ்க்கையை தொடர விருப்பம் இல்லையெனில் ஒரு தலைப்பட்சமாக மணமுறிவு வழக்கு தொடர இயலும், இதற்கான தடைகள் மிகவும் கடினமானவை. மேலும் மணமுறிவிற்கான காரணங்கள் எதிர் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் இந்த வழக்கு வெகு நாட்களுக்கு - பொதுவாக 2 ஆண்டுகளுக்கு மேலாக - நீடிக்கும், எனவே மணமுறிவு பூர்வாங்க வழக்கு பல விடயங்களை விரைவில் தெளிவுபடுத்தும். இது குறித்த தகவல்களை ஆலோசனை மையத்தில், சட்ட ஆலோசகரிடம் அல்லது நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்.

## நான் திருமணம் செய்து கொள்ள நிர்பந்திக்கப்பட்டேன். நான் என்ன செய்வது?

இத்தேசத்தில் வாழும் அனைவருக்கும் கணவன் அல்லது மனைவியை சுதந்திரமாக தெரிவு செய்யும் உரிமை உள்ளது. சட்டத்தின்படி இத்தேசத்தில் அல்லது வெளிநாட்டில் நடைபெறும் கட்டாயத் திருமணம் தடை செய்யப்பட்டுள்ளது. இது குறித்து அறிந்துகொள்ள www.zwangsheirat.ch என்ற இணைய பக்கத்தைப் படியுங்கள். அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆலோசனை மையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். பல மொழிகளில் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை அளிக்கப்படும்.

## பதிவு செய்யப்பட்ட, திருமணம் அல்லாத ஒரு உறவினை எவ்வாறு முறிக்க இயலும்?

01.07.2022-ற்கு முன்னால் தங்கள் உறவினை பதிவு செய்த ஒரு பாலின தம்பதிகள் அவர்கள் வசிக்கும் இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் பிரிவிற்காக விண்ணப்பிக்கலாம். அவர்கள் தங்களுடைய துணைவியுடன் பிரிவு குறித்து ஒப்புதலுக்கு வர இயலவில்லையெனில் பதிவு செய்யப்பட்ட உறவினை முறிப்பதற்கு அவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பிரிவு காலம் ஒரு வருடமாகும். மணமுறிவு பூர்வாங்க வழக்கினால் தீர்மானிக்கப்படும் அனைத்து விடயங்களும் நீதிமன்றத்தினால் முறைப்படுத்தப்படும். நீங்கள் உங்கள் துணைவியின் வாயிலாக வன்முறைக்கு ஆளானால் அல்லது அச்சுறுத்தப்பட்டால் காவலர் மூலம் வன்முறை பாதுகாப்பு சட்டத்தின்படி உங்கள் பாதுகாப்பிற்கான நடவடிக்கையை எடுக்க முடியும்.

## நாங்கள் பதிவு செய்யப்படாத, திருமணமல்லாத ஒரு ஒரு உறவினில் வாழ்கின்றோம். நான் இதிலிருந்து பிரிய விரும்புகிறேன்.

இது சட்டபூர்வமாக பிணைக்கப்படாத ஒரு உறவாகும். இவ்வுறவிலிருந்து பிரியும்போது கீழ்க்கண்டவற்றை கவனிக்க வேண்டும்.

- இருவருக்கும் பிறந்த பிள்ளைக்கான பராமரிப்பு பொறுப்பு வழக்கானது பிள்ளைகள் மற்றும் பெரியவர்களின் பாதுகாப்பு ஆணையத்தில் KESB (Kinder- und Erwachsenenschutzbehörde) நடக்கும். மேலும் விவரங்களுக்கு உங்கள் பிராந்திய சட்ட சேவை மையத்தை தொடர்பு கொள்ளுங்கள்.
- பிள்ளைக்கான பராமரிப்பு பணம் குறித்து உங்களால் ஒருமித்த கருத்தினை அடைய இயலவில்லையெனில், அது பிராந்திய நீதிமன்றத்தால் கணக்கிடப்படும். பிள்ளைக்கான பராமரிப்பு உரிமையைப் பெற்றவர் பிரிவின் பிற்பாடு தாபரிப்பு பணம் பெற்றுக் கொள்ள முடியாது. பிள்ளையின் பராமரிப்பு பணம் குறித்த முடிவை நீதிமன்றம் எடுக்க நேரிட்ட உடனே பராமரிப்பு பொறுப்பு குறித்த முடிவும் KESB-இடமிருந்து நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்படும்.
- யார் வீட்டில் இருப்பது என்பது வாடகை ஒப்பந்தம், வீட்டு வாடகைக்கு கொடுத்தவரின் மற்றும் முன்னாள் துணைவரின் ஒத்துழைப்பு ஆகியவற்றை சார்ந்ததாகும்.

பதிவு செய்யப்படாத திருமணமல்லாத உறவில் வாழும் தம்பதியினர் பிரிவது சட்டப்படி மிக சிக்கலான காரியமாய் இருக்கின்றபடியால் இவ்விஷயத்தில் வழக்கறிஞரிடம் அல்லது ஆலோசனை மையத்தில் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுங்கள். நீங்களும் உங்கள் பிள்ளைகளோ உங்கள் துணைவரின் வாயிலாக வன்முறைக்கு ஆளானால் அல்லது அச்சுறுத்தப்பட்டால் வன்முறை பாதுகாப்புச் சட்டத்தின்படி உங்கள் பாதுகாப்பிற்கான நடவடிக்கை எடுக்க முடியும்.

## முக்கியமான முகவரிகள்:

Einleitung Eheschutzverfahren
(மணமுறிவு பூர்வாங்க வழக்கினை நடைமுறைக்கு கொண்டு வருதல்)
நீங்கள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள பொறுப்பான பிராந்திய நீதிமன்றம்
படிவம்: மணமுறிவு பூர்வாங்க வழக்கு

Ärztliche Hilfe und Zeugnisse
(அவசர மருத்துவ உதவி மற்றும் சான்றுகள்)
www.permanence.ch
Tel. 044 215 44 44

**வழக்கறிஞர்கள் சங்கம்**
www.zav.ch
www.anwaltskollektiv.ch
www.djs-jds.ch

**திருமணமல்லாத உறவில் வாழ்பவர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள்**
www.zh.ch
தாபரிப்பு மற்றும் பிள்ளைகளின் பராமரிப்பு

**பாதுகாப்பு**
காவலர் அவசர தொடர்பு எண் 117
பெண்களுக்கான பாதுகாப்பு இல்லங்கள்
www.frauenhaeuser.ch

**தடையங்களை பத்திரப்படுத்துதல்**
www.with-you.ch

**பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஆலோசனை மையங்கள்**
www.bif-frauenberatung.ch
www.frauennottelefon.ch
www.frauenberatung.ch

**பிள்ளைகளுக்கு ஆதரவு**
www.kokon-zh.ch
www.okeywinterthur.ch
www.kinderanwaltschaft.ch

இந்தத் தகவலேட்டில் காணப்படும் அடிக்கோடிடப்பட்ட சொற்கள் வலைப்பக்கங்கள் மற்றும் ஆவணங்களுக்கான ஹைப்பர்லிங்குகள் ஆகும். அவற்றை இந்த QR-கோட் வாயிலாகத் திறக்கப் பெறலாம்.




**BIF** Beratungsstelle für Frauen
gegen Gewalt in Ehe und Partnerschaft

Postfach, 8031 Zürich
Tel. 044 278 99 99
www.bif-frauenberatung.ch
info@bif.ch

PC 87-137016-4
IBAN: CH32 0900 0000 8713 7016 4


Opferhilfe Zürich

LGBTIQ+ FRIENDLY

* எளிதில் படிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் ஏதுவாக நாங்கள் ஆண் பாலினப்பெயரையே துணைவர் அல்லது துணைவிக்கு பதிலாக பயன்படுத்தி உள்ளோம். எனினும், இதன் மூலமாக அவரவர்களின் தனிப்பட்ட பாலின அடையாளங்களைக் கொண்ட அனைவருமே குறிப்பிடப்படுகின்றனர்.

© 2025, BIF